1992 ஏப்ரல் 20]

அதிலே காலதாமதம் ஏற்பட்டால், அந்த வியாதி வெகு விரைவாகப் பரவி, சமுதாயத்தையே பாதிக்கக்கூடிய நிலை இருப்பதால், இதுபோன்ற பரிசோதனைகளை வாந்தி, பேதி எங்கு வந்தாலும், உடனடியாகச் செய்து, அவ்வாறு ஆய்வு செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாந்தி, பேதி எங்கே வந்தாலும் உடனடியாக அதைப் பரிசோதனை செய்வதற்கு அரசாங்க மருத்துவமனை தயாராக இருக்கிறது. இப்போது நாம் வைக்கிற வேண்டுகோள்கள் எல்லாம், அப்படி எங்கேயாவது வாந்தி, பேதி வருகிற நிலை தெரியுமேயானால், உடனே அன்றைக்கே மருத்துவமனைக்கு அவர்கள் வந்து அதைத் தெரிவிக்க வேண்டுமென்ற வேண்டுகோளைத்தான் சட்டமன்றத்தின் மூலமாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 556, திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

556—

வலிவலத்திலுள்ள கனகா மருத்துவமனையை கையகப்படுத்தல்.

*1516—திரு. வே. தம்புசாமி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவாரூர் வட்டம், வலிவலத்தில் அறக்கட்டளை மூலம் நடத்தப்படும் கனகா மருத்துவமனையை கையகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது வலிவலத்தில் நடந்துவரும் கனகா மருத்துவமனையை கையகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனை நகரத்தினுடைய மையப் பகுதியில் அமைந்திருக்கிறது. ஏறத்தாழ, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், கீவலூர், நாகப்பட்டிணம் ஆகியவற்றிற்கிடையே ஒரு பெரிய மருத்துவமனை என்று சொன்னால், அப்படி தனியார் மூலம்—ட்ரஸ்ட் மூலம் இயங்கி வருகிற, வலிவலத்திலே இருக்கிற அந்த மருத்துவமனையாகும். இப்போது, அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு, அந்த நிறுவனத்தால் முடியவில்லை. அரசிடம் ஒப்படைப்பதற்கு அவர்கள் சம்மதிக்கிறார்கள். ஆகவே அதை அரசு எடுப்பதன்மூலம், அந்த சுற்றுவட்டார மக்களை பாது காப்பதற்கு மிகப் பெரிய அளவுக்கு அது உதவியாக இருக்கும். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் இதைப் பரிசீலித்து, அந்த மருத்துவமனையை அரசே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டிரஸ்ட் மூலமாக அது இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, 1983-ஆம் ஆண்டு, அரசாங்கம் அதை எடுத்துக் கொள்ளலாம் என்று ஒரு ஆணை பிறப்பித்தது. ஆனால், அப்போது உபரி நிலம் அங்கே இருந்தது, அதை விற்றிருக்கிறார்கள். அதற்கான 1,51,600 ரூபாய், அரசாங்கத்தினுடைய கணக்கிலே கட்ட வேண்டுமென்று சொல்லப் பட்டது. அதுவும் செய்யப்படவில்லை. ஆறு ஏக்கர் நிலம், அதிலே அவர்கள் சொந்தமாக அந்த ட்ரஸ்டே வந்து விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதையும் அரசாங்கத்திடத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று சொன்னபோது, அதையும் அவர்கள் செய்யவில்லை. இதை எடுத்துக் கொள்ள வேண்டு மென்று அவர்கள் சொன்னார்களேயொழிய, அரசாங்கம் உத்தரவு போட்டதேயொழிய, எழுத்து மூலமாக அவர்கள் கேட்டுக் கொள்ளாதக் காரணத்தினால், அதிலே சிக்கல் ஏற்பட்டு, அப்படியே நின்று போய்விட்டது. இப்போது இருக்கிற நிலைமை, ஏதோ அதிலே கடன் இருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த நிலத்தை விற்று, அந்தக் கடனை ஈடுகட்ட வேண்டுமென்றெல்லாம் சொல்கிறார்கள். எனவே, இதை முழுமையாக ஆய்வு செய்த பின்னாலேதான், அதிலே முடிவு செய்ய முடியும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த ட்ரஸ்டுக்காக ஒதுக்கப்பட்ட நிலம், உபரி நிலமாக அறிவிக்கப்பட்டு, அந்த நிலத்தைப் பெற, அரசுத் தரப்பிலேயிருந்து பணம் வழங்கப்பட்டது. அந்தப் பணத்தையும், மருத்துவமனையையும் சேர்த்து வழங்க

1992 ஏப்ரல் 20]

வேண்டுமென்று கோரப்பட்டது. அவர்கள் கோரியது என்பது, பணத்தை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம்; மருத்துவ மனையை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கோரினார்கள். இரண்டும் சேர்த்துக் கொடுத்தால்தான், அரசு எடுத்துக் கொள்ளுமென்று அன்றையதினம் சொன்னக் காரணத்தால், அதை எடுத்துக் கொள்ள முடியாமல் போய் விட்டது. ஆகவே, அவர்களுக்குச் சேர வேண்டிய அந்த 1,51,000 ரூபாயையும் அவர்கள் எடுத்துக் கொண்டு விட்டார்கள். எனவே, அந்த மருத்துவமனையை அரசே எடுத்துக் கொண்டு, மேலும் அதை அபிவிருத்திச் செய்வதன் மூலமாகத்தான், அந்தப் பகுதிக்கு ஒரு சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்த முடியும்; அவ்வாறு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பணத்தை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது. காரணம், அது ட்ரஸ்டுக்குச் சேர்ந்தது. எனவே, ட்ரஸ்டை அரசாங்கமே எடுத்துக் கொள்கிறபோது, அவர்கள் நடத்த முடியாதக் காரணத்தால் தான் அரசு எடுத்துக் கொள்கிறது. அப்படி இருக்கிறபோது, அதிலே இருக்கிற பணத்தை, அதுவும் நிலத்திற்கு ஈடாக, உபரி நிலத்திற்கு ஈடாகக் கிடைத்தப் பணத்தை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது. அது தவறு. எனவேதான், அரசாங்கம் அதை கைவிட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, அந்த 1,51,000 ரூபாய்க்கு என்ன கணக்கு என்பதை முதலிலே அவர்கள் தெரிவிக்க வேண்டும். அடுத்து, 6 ஏக்கராவை விற்று—அங்கே கடன் இருக்கிறது; அதைக் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள்; ஏற்கனவே ஒரு இலட்சத்து ஐம்பத்தோராயிரம் எடுக்கப்பட்டு இருக்கிறது. டிரஸ்டிலே செலவாகியிருந்தால் கூட பரவாயில்லை. எனவே அதை முழுமையாய்ப் பார்த்து, இறுதியாக முடிவு எடுக்கலாம்.

முற்பகல் 9.55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 557, திருமதி கே. மரியம்உல் ஆசியா, திரு. வி. பி. சந்திரசேகர், திரு. கே. பி. மணிவாசகம், திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

57—

சேரன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்தல்.

2388—திருமதி கே. மரியமுல் ஆசியா,
திரு. வி. பி. சந்திரசேகர்,
திரு. கே. பி. மணிவாசகம்,
திரு. கே. செல்வராஜ்: